மற்றும் 2001 முதல் 2006 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், இவர் 19–5–2001 முதல் 1–3–2002 வரை தமிழக அமைச்சராகவும் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று, அமைதி காத்தனர்.)

முற்பகல் 9–35

2. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று *(26–3–2010)* வெள்ளிக்கிழமை, முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ இன்று (26–3–2010) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2010 மார்ச் 26

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று (26-3-2010) வெள்ளிக்கிழமை, வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2010-2011, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

2010-2011 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1 மாநில சட்டமன்றம்	16,40,93	—	—
2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை	13,02,45	—	—
3 நீதி நிருவாகம்	196,85,70	—	—
4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	432,72,68	11,94,61	1,75
5 வேளாண்மைத் துறை	938,62,85	49,33,62	—